**சுருக்கம்**

பள்ளிக் கல்வித் துறை - மேல்நிலைக் கல்வி - 2019-20ம் கல்வியாண்டில் அரசு / நகராட்சி மேல்நிலைப் பள்ளிகளில் காலியாக உள்ள 2,449 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் - ஒப்பந்த அடிப்படையில் (On Contract Basis) தற்காலிகமாகத் தொகுப்பூதியத்தில் பெற்றோர் ஆசிரியர் கழகம் மூலம் தகுதி வாய்ந்த நபர்களைக் கொண்டு நியமனம் செய்து கொள்ள அனுமதித்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக் கல்வித் (ப.க2(2)) துறை**

அரசாணை(1டி) எண்.334 | நாள் 26.08.2019
திருவள்ளுவர் ஆண்டு 2050
விகாரி, ஆவணி - 9

படிக்கப்பட்டவை:-

1. அரசாணை (1டி) எண்.619, பள்ளிக் கல்வி (பக2(2)) துறை, நாள் 19.09.2018.
2. அரசு கடித எண்.1684/தொ.க3(1)/2019-2, நாள் 25.01.2019.
3. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.29418/டபிள்யு3/ இ3/2019, நாள் 12.07.2019.

------

**ஆணை:**

மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், 2019-20ஆம் கல்வியாண்டில் அரசு / நகராட்சி மேல்நிலைப் பள்ளிகளில், தற்போது காலியாகவுள்ள முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களில், 2,449 பணியிடங்கள் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தெரிவு செய்து நிரப்பப்பட வேண்டும் என்றும், ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் நேரடியாக நிரப்பப்பட வேண்டிய காலிப்பணியிடங்களை நிரப்பிட ஆசிரியர் தேர்வு வாரியத்திடம் தெரிவு பட்டியல் ஏற்கனவே கோரப்பட்டுள்ளது என்றும், அப்பட்டியல் பெறப்படும் வரையில், பள்ளிகளில் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் காலிப் பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருந்தால், மாணவர்களின் கல்வித்தரம் குறைவதற்கு வாய்ப்புள்ளது என்றும், இவ்வாண்டு பொதுத்தேர்வு எழுதும் 11-ஆம் வகுப்பு மற்றும் 12-ஆம் வகுப்புகளில் பயிலும் மாணவர்களின் கல்வி நலனைக் கருத்தில் கொண்டு, முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் காலிப் பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டியது அவசியமாகிறது என்றும், மேலும், மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கடந்த 2018-19ம் கல்வியாண்டில், 1,474 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களை தற்காலிகமாக தொகுப்பூதிய அடிப்படையில் பெற்றோர்

ஆசிரியர் கழகம் மூலம் நியமித்துக் கொள்ள தலைமையாசிரியர்களுக்கு அனுமதி வழங்கி ஆணையிடப்பட்டது என்றும், அதேபோன்று இவ்வாண்டும் முக்கியப் பாடங்களில் காலியாகவுள்ள 2,449 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் காலிப் பணியிடங்களை, முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கான தகுதியுள்ளவர்களைக் கொண்டு, மாதம் ரூ.10,000/-வீதம் தொகுப்பூதியத்தில், தற்காலிகமாக பெற்றோர் ஆசிரியர் கழகம் மூலம் நியமித்துக் கொள்ள அனுமதியும், அவ்வாறு ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்படும் 2,449 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கு சம்பளத்திற்கான செலவினத் தொகையினை அனுமதித்தும் உரிய ஆணை வழங்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை நன்கு ஆய்வு செய்த பின்னர், அரசு கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது:-

(i) 2019-20ம் கல்வியாண்டில், முக்கிய பாடங்களான தமிழ், ஆங்கிலம், கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல், தாவரவியல், விலங்கியல், பொருளியல், வரலாறு, புவியியல் மற்றும் வணிகவியல் ஆகிய பாடங்களில் காலியாகவுள்ள 2,449 காலிப் பணியிடங்களை, அக்காலிப் பணியிடங்களின் பொருட்டு, ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் நேரடியாக பணிநாடுநர்களைத் தேர்வு செய்து நிரப்பப்படும் வரை அல்லது ஆகஸ்ட், 2019 முதல் டிசம்பர், 2019 முடிய 5 மாதங்களுக்கு, இவற்றில் எது முந்தியதோ அதுவரை, பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் வாயிலாக அந்தந்த பள்ளிகள் அமைந்துள்ள ஊர்களில் மற்றும் அருகாமையில் உள்ள பகுதிகளில் வசிக்கும் சம்பந்தப்பட்ட பாடப் பிரிவுகளில் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணிக்கான தகுதி பெற்றுள்ள நபர்களைக் கொண்டு, சம்பந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியர், மேல்நிலைப் பிரிவிற்கான உதவித் தலைமையாசிரியர் மற்றும் மூத்த முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்ட குழு மூலமாக, ஒப்பந்த அடிப்படையில் (Contract Basis), தற்காலிகமாக நிரப்பிக் கொள்வதற்கு பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

(ii) இவ்வாறு பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் வாயிலாக, ஒப்பந்த அடிப்படையில் (Contract Basis), தற்காலிகமாக நியமனம் செய்யப்படும் ஆசிரியர்களுக்கு மாதம் ரூ.10,000/-வீதம் தொகுப்பூதியம் வழங்கப்படும்.

(iii) இவ்வகையில் நியமிக்கப்படும் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கு ஐந்து மாதங்களுக்கு ஊதியம் வழங்கும் வகையில் ஏற்படும் செலவினம் (ரூ.10,000 x 2,449 x 5) ரூ.12,24,50,000/- (ரூபாய் பன்னிரண்டு கோடியே

இருபத்து நான்கு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வழங்கப்படுகிறது.

3. மேலே பத்தி-2(iii)இல் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

2202 - பொதுக்கல்வி - 02 இடைநிலைக்கல்வி - 109 அரசு இடைநிலைப் பள்ளிகள்- மாநிலச் செலவினங்கள் - AA அரசு இடைநிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர் மற்றும் பணியாளர்களின் சம்பளம் - 333 தொழில்முறை, சிறப்புப் பணிகளுக்குத் தொகை கொடுத்தல் - 04 ஒப்பந்த ஊதியம்

(த.தொ.கு.2202-02-109 AA 33304)

4. மேலே பத்தி-2 (iii)-ல் ஒப்பளிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினம் 2019-20-ம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் மேற்கொள்ளப்படும். இருப்பினும் சட்டமன்றத்தின் ஒப்புதலை பெறும் பொருட்டு, ஒரு சிறப்பு நிகழ்வாக கருதி (SI) இச்செலவினத்தை 2019 – 20ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட வேண்டும். இதனை எதிர்நோக்கி இச்செலவினத்தை மேற்கொள்ள பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. இச்செலவினத்திற்கான உரிய கருத்துருவினை 2019 – 20 திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கம் மற்றும் துணை மதிப்பீடுகளில் (Supplementary Estimates 2019-20) சேர்க்கத் தக்க வகையில் உரிய விவரங்களுடன் நிதி (வ.செ.பொ.I/கல்வி-II)த் துறைக்கு அனுப்புமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.எண்.2655/Fs/P/2019/Edn-II/2019, நாள் 24.08.2019ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண்.1218 (ஆயிரத்து இருநூற்று பதினெட்டு).

//ஆளுநரின் ஆணைப்படி//

பிரதீப்யாதவ்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை-6.
மாநில கணக்காயர், சென்னை- 18.
சம்பந்தப்பட்ட சம்பள கணக்கு அலுவலர்கள்.
சம்பந்தப்பட்ட மாவட்ட கருவூல அலுவலர்கள் /
துணை கரூவூல அலுவலர்கள்.
அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

<u>நகல்:</u>

தலைவர், ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை-6.
நிதி(கல்வி II/வ.செ.பொது I & II) துறை, சென்னை-9.
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை-9.
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை-9.
மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும்
விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் அலுவலகம்,
சென்னை-9.
பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளரின்
முதுநிலை முதன்மை தனி செயலாளர், சென்னை-9.
பள்ளிக் கல்வி (வ.செ / அ.ந.மு) துறை, சென்னை-9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்

26/8/19